www.tamilarangam.net

# புலிகள் தமது கைகளில் படிந்துள்ள இரத்தக் கறையை இரத்தத்தாலேயே கழுவ நினைப்பது மடமைத்தனம்...

EPIC (U.K. Branch)
B M BOX 1738
LONDON WC1N 3XX

சகவிடுதலை இயக்கங்களின் முக்கிய உறுப்பினர்களை தொடர்ச்சியாக திட்டமிட்ட முறையில் கொலைசெய்துவரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் (L.T.T.E) நரகப்பலியாட்டத்திற்கு இம்முறை EPRLF யைச் சேர்ந்த அதிமுக்கிய உறுப்பினர்கள் ஈழமணி (டேவிற்சன்), ரமேஸ் (அற்புதராஜா) ஆகியோர் இரையாக்கப்பட்டுள்ளனர்.

இவ்விரு உறுப்பினர்கள் மீதும் தொடரப்பட்ட இக்கொலை முயற்சி "தற்செயலானது" என இந்தியாவிலும் ஈழத்திலும் புலிகள் "மனம்வருந்தியுள்ள" போதிலும் கடந்த சில மாதங்களாக EPRLF ஐ சேர்ந்த ரேகன், அமீன், TELO தலைவர் ஸ்ரீ சபாரட்ணம் உட்பட 150 ற்கு மேற்பட்ட போராளிகள் மற்றும் கடந்த வாரத்தில் பருத்தித்துறையில் PLOT உறுப்பினர்கள் மீது புலிகளின் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்களையும் இன்னும் மக்கள் மறந்துவிடவில்லை

இவ்விரு EPRLF தோழர்களும் தவறுதலாக சுடப்பட்டதாக புலிகள் கூறுகின்றனர். ஆம், இந்தியாவிலிருந்து கொலைக்கு உத்தரவிடும் புலிகளின் தலைமைக்கு களத்தில் போராடும் சக போராளியை அறிந்திருக்க நியாயமில்லைதான்!!

தோழர் டேவிற்சன் முன்னாள் ஈழ மாணவர் பொதுமன்றத்தின் (GUES) செயலாளராகவும், பல அரசிற்கெதிரான போராட்டங்களை மேற்கொண்டு இராணுவத்-தினரால் கைதுசெய்யப்பட்டார். 1983ம் ஆண்டு அரசுக்கெதிரான பாதயாத்திரை இவர் தலைமையில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. தோழர் அற்புதராஜா சென்ற வருடத்தில் ஈழத் தேசிய விடுதலை முன்னணியின் (ENLF) செயலாளராகக் கடமையாற்றியது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான இரு முக்கிய தோழர்களையும் புலிகளால் "அடையாளம் காணமுடியாமற்போனது" வியப்பிற்குரியதே. சுயமாக சிந்திக்கத் தெரிந்த எவரும் இக்காரணங்களை ஒரு போதும் ஆதரித்து நிற்கமாட்டார்கள். இன்று ஈழத்தில் பல இயக்கங்கள் பரவலாக நின்று போராடிக்கொண்டிருக்கும் இவ் வேளையில் வேறு இயக்கத்தினருக்கு ஏற்படாத "தற்செயலான"

(P.T.O)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொலைகள் ஏன் புலிகளுக்கு மட்டும் ஏற்படுகின்றது என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும். புலிகளின் தொடர்ச்சியான கொலை-களால் தமது கைகளில் படிந்துள்ள இரத்தக் கறையை இரத்தத்தாலேயே கழுவிவிட எண்ணுவது முட்டாள்த்தனமான செயலாகும்.

ஆதிகால வேடருக்கு கைதிறமைக் காட்டும்போது காற்றுக்கு வில் எய்துவார்களாம். ஆம், புலிகளும் கைதிறமை-யைக் காட்டத்தான் சகபோராளிகளை கொன்று குவிக்கிறார்கள் போலும்.!! ஆதிகால வாசிகளைப்போல் எதிர்த்தவர்களெல்லாம் கொன்று குவிக்கும் செயலை புலிகள் இனியும் தொடராமல் மனித நாகரீகம் மேலோங்கிய இக்காலகட்டத்தில் அதற்கேற்றபடி நடந்துகொள்ள வேண்டும். ஈழமக்களை கொன்று குவிக்க கங்கணம் கட்டிக்கொண்டு ஸ்ரீலங்கா இராணுவம் ஒருபுறமிருக்க மறுபுறத்தில் விடுதலைப்புலிகள் போராளிகளைக் கொன்றுகுவிப்பது எமது போராட்டத்திற்கு அண்மைக் காலங்களில் எவ்வளவு தூரம் அவப்பெயரையும் பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது என்பது நாம் கூறி அறிய வேண்டிய விடயமில்லை.

EPRLF வினராகிய நாம் இயக்க மோதல்களின் ஆரம்பம் பின்விளைவுகளை உணர்ந்து மிகவும் பொறுமையுடன் செயலாற்றி வருகின்றோம். இக்கொலை முயற்சிகள் தொ-டருமாகவிருந்தால் இயக்க மோதல்கள் எமது இனத்-தையே பாதிக்கும். ஸ்ரீலங்கா அரசின் ஒடுக்குமுறைக்கு எதிராக எமது சக்தியையும், நேரத்தையும் செலவிட வேண்டிய இவ்நெருக்கடியான காலகட்டத்தில் புலிகளின் இச்செயல் எம்மை எமது இலக்குகளிலிருந்து விலக்குவதா-கவே அமைகின்றது.

ஈழப்போராட்டத்தில் இயக்கங்களின் ஒற்றுமை நிலைக்கவும், திட்டமிட்ட முறையில் அதிகாரவெறியில் முக்கிய போராளிகளைக் கொலைசெய்யும் புலிகளின் சதித் திட்டத்திற்கு எதிராகவும் அனைத்து ஜனநாயக விரும்பி-களையும் குரல்கொடுக்க அழைக்கிறோம்.

16.06.1986

இலண்டன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்